25.02.2025

O.S.No.226/2013

வா.சா.1.திரு.பரமேஷ்வரன் த.பெ.V.K.T தங்கவேலு

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

இந்த வழக்கின் வாதிகளுக்கு எதிராக மேலூர் சார்பு நீதிமன்றத்தில் O.S.No.618/2012 வழக்கை தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் இந்த வழக்கின் வாதிகளிடமிருந்து சொத்தின் அனுபவத்தை என்வசம் ஒப்படைக்க பரிகாரம் கோரியிருந்தேன் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய தேதியில் இருந்து இன்றைய தேதி வரை தாவா சொத்தின் சுவாதீனத்தில் நான் இருந்ததில்லை என்றால் சரிதான். என்னுடைய அனுபவத்தில் என் அனுமதி இல்லாமல் அத்துமீறி வாதிகள் உழுது வருகிறார்கள். எப்போது வாதிகள் அத்துமீறினார்கள் என்றால் நான் கிரையம் வாங்கி ஒரு வாரம் கழித்து வாதிகள் அத்துமீறி தாவா சொத்தில் நுழைந்துவிட்டார்கள். அது சம்மந்தமாக காவல் நிலையத்தில் நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தில் நான் வழக்கு தொடுத்தேன். நான் கிரையம் வாங்கி ஒரு வார காலத்திலேயே மேலூர் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துவிட்டேனா என்றால் இல்லை. நான் கூறுவதுபோல் வாதிகள் எனது அனுபவத்தில் உள்ள சொத்தில் அத்துமீறி ஆக்கிரமிக்கவில்லை என்றாலும், எனது கிரையம் மோசடி கிரையம் என்பதால் தாவா சொத்தின் அனுபவத்தை வாதிகள் ஒருபோதும் என்னிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. நான் மேலூர் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த O.S.No.618/2012 வழக்கில் இந்த வாதிகள் எனது சொத்தில் நான் கிரையம் வாங்கிய ஒரு வாரகாலத்திற்கு பின்னிட்டு அத்துமீறி உள்ளே நுழைந்துவிட்டார்கள் என்று பிராதில் சொல்லவில்லை என்றால் எனக்கு ஞாபகமில்லை.

2. மேலூர் சார்பு நீதிமன்றத்தில் O.S.No.618/2012 தாக்கல் செய்தபோது இந்த வழக்கின் 3, 4 வாதிகள் 1 வது வாதியிடமிருந்து தானசெட்டில்மெண்ட் எழுதி வாங்கிய விபரம் தெரியுமா என்றால் தெரியும். ஆனால் அது தவறான ஆவணம். மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணங்களை ரத்து செய்ய சொல்லி அந்த வழக்கில் பரிகாரம் எதுவும் கோரவில்லை என்றால் எனக்கு ஞாபகமில்லை. இந்த வழக்கில் நான் எதிர்கோருரிமை எதுவும் கோரவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த O.S.No.618/2012 வழக்கு தள்ளுபடி ஆனதை எதிர்த்து மாண்பமை சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் சீராய்வு தாக்கல் செய்ததாக சொல்லியிருப்பதால் அதற்கான ஆவணங்ள் எதுவும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் உண்மையிலேயே அவ்வாறு சீராய்வு மனு எதுவும்

தாக்கல் செய்யாததால் தான் அது சம்மந்மான ஆவணங்கள் எதுவும் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த O.S.No.618/2012 வழக்கு 21.04.2016 ல் தள்ளுபடியான தீர்ப்பு மட்டுமே தற்போது வரை ஊர்ஜீதத்தில் உள்ளது என்றால் சரியல்ல. அதற்கு எதிராக மாண்புமை சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் நிலுவையில் உள்ளது. அதற்கான சீராய்வு மனு எண் எனக்கு ஞாபகமில்லை.

3. 1 ம் வாதியிடம் தாவா சொத்தை கிரையம் பேசிய காலத்தில் அந்த பகுதியில் உள்ள நிலங்களின் மதிப்பை காட்டிலும் அதிகமான விலையான செண்ட் ஒன்றிற்கு ரூபாய். 25,000/- கொடுப்பதாகவும் ஒரு வார காலத்தில் கிரையம் பதிந்து கொள்வதாகவும் நான் ஆசை வார்த்தை கூறியதன் அடிப்படையில் தான் பொது அதிகார ஆவணம் 2 ம் வாதிக்கு எழுதி கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதன்படி 1, 2 வாதிகள் படிப்பறிவு இல்லாதவர்கள் என்பதை அனுகூலமாக கொண்டு எனது கிரைய ஆவணத்தில் கண்டுள்ள சாட்சிகள், பத்திர எழுத்தர், சார்பதிவாளர் ஆகியோரின் ஒத்துழைப்பின் பேரில் பிரதி பிரயோஜனம் கொடுக்காமல் 2 ம் வாதியிடமிருந்து ஏமாற்றி கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து ஆதியில் 1 ம் வாதிக்கு பாத்தியப்பட்டது என்பதில் எனக்கு ஆட்சேபனையில்லை என்றால் சரிதான். நான் கிரைய பத்திரம் பதிந்தபின்பு பட்டா மாறுதலுக்காக வட்டாட்சியரிடம் மனு கொடுத்தேன் என்றால் கொடுத்தேன். எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவ்வாறு மனு கொடுத்தற்கான மனு நகலோ, பணம் கட்டிய செலானோ நான் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தற்போது ஞாபகமில்லை என சாட்சி கூறுகிறார். ( இந்த நீதிமன்றம் பி**.**வா**.**சா**. 1** ன் நிருபண வாக்குமூலத்தை சாட்சியிடம் காட்டி அவ்வாறு ஆவணங்கள் எதுவும் உள்ளதா என்று கேட்டபோதும் அதை வாங்கி பார்க்காமல் தனக்கு ஞாபகமில்லை என சாட்சி கூறுகிறார்**) .**

4. தாவா சொத்தை பொறுத்து 3, 4 வாதிகள் பெயரில் தான் பட்டா எண்.1543 என தற்போது வரை பட்டா உள்ளது என்றால் சரிதான். அது தவறாக உள்ளது. அவ்வாறு தவறாக பட்டா உள்ளது என ஆட்சேபித்து வருவாய் கோட்டாட்சியரிடம் மனு எதுவும் கொடுக்கவில்லை என்றால் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதால் நான் கொடுக்கவில்லை. மேற்படி பட்டாவானது 10.08.2005 தேதியில் 3, 4 வாதிகள் பெயரில் மாறிவிட்டது என்றால் சரியல்ல. மேலூர் சார்பு நீதிமன்றத்தில் O.S.No.618/2012 வழக்கை 16.06.2012 ல் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் 2009 ல் கிரையம் வாங்கியதாக சொல்லப்பட்ட தேதியில் இருந்து 16.06.2012 வரை 3, 4 வாதிகள் பெயரில் உள்ள பட்டாவை ஆட்சேபித்து மனு எதுவும் கொடுக்கவில்லை என்றால் இல்லை. தாவா சொத்தை பொறுத்து எனது பெயரில் கிஸ்தி செலுத்தியுள்ளேனா என்றால் நான் கிஸ்தி செலுத்துவதற்கு மதுரை வடக்கு வட்டாட்சியரிடம் வரைவோலை எடுத்து

பதிவு தபால் மூலம் அனுப்பியிருந்தேன். அவர்கள் எனது பெயரில் கிஸ்தி செலுத்த முடியாது என கூறிவிட்டார்கள். அந்த ஆவணத்தை நான் O.S.No.618/2012 ல் தாக்கல் செய்துள்ளேன்.

5. எனக்கு நன்றாக எழுதப்படிக்க தெரியும் என்றாலும், ஏற்கனவே இதே நீதிமன்றத்தில் என் முன்னால் காட்டப்பட்ட ஆவணங்களை படித்து பார்த்து சாட்சியம் அளித்துள்ள நிலையில் இன்றைய சாட்சியங்களில் எனக்கு எழுத படிக்க தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு எதிராக மதுரை மாவட்ட நீதிமன்றங்களில் 12 மோசடி வழக்குகளும், 6 குற்ற வழக்குகளும் நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. என்மீது இரண்டு வழக்குகள் உள்ளது அதில் ஒன்று விடுதலை ஆகிவிட்டது. ஒன்று நிலுவையில் உள்ளது. நிலுவையில் உள்ள வழக்கு மதுரை நீதிமன்றத்தில் உள்ளது நீதிமன்ற பெயர் எனக்கு தெரியாது. ஒத்தகடை காவல் நிலையத்திலும், கருப்பாயூரணி காவல் நிலையத்திலும் எனக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஒத்தகடை காவல் நிலையத்தில் மட்டும் பொய்யான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதில் இருந்து நான் விடுதலை செய்யப்பட்டுவிட்டேன். தாவா சொத்தை பொறுத்து நான் மோசடியாக கிரையம் பெற்றுள்ளதால் தாவா சொத்தில் எனக்கு எவ்வித உரிமையோ, பாத்தியமோ இல்லை என்றாலும் எனது கிரையம் சட்டரீதியாக செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.